

# இடம் பொருள் கலைஞர் 80

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் பத்திரிகையாளர் குடியிருப்பு!**






# பத்திரிகையாளர் குடியிருப்பு!

## நான்காம் தூண்களுக்கான நலத்திட்டம்

‘முரசொலி என் மூத்த பிள்ளை’ என்றார். முத்துவேலரின் அந்தப் பிள்ளையே பள்ளிப் பாலகனாக ‘மாணவ நேசன்’ நடத்தினார். ஆட்சியில் இருந்த போதும், இல்லாத போதும் ஊடகங்களின் தலைப்புச் செய்தியானார். கடைசி வரை, ஓய்வெடுக்காதவரின் பேனாவும் ஓய்வெடுக்கவே இல்லை. ஆம்... ‘எந்தச் செங்கோல் போனாலும் பரவாயில்லை... எனக்கு எழுதுகோல் போதும்’ என்று பத்திரிகையாளராக இறுமாந்தார். அவரே முத்தமிழறிஞர் கலைஞர் என்றானார்!

தமிழ்நாட்டில் பத்திரிகையாளர்கள் நிலை 50 ஆண்டுகளுக்கு முன்பு, மிக மோசமாக இருந்தது. பணிப் பாதுகாப்பு, போதிய ஊதியம் ஆகியவை இல்லாமல் பத்திரிகைத் துறையில் அல்லல்பட்டவர்கள் பலர். வீட்டு வாடகை கூட தர முடியாது பலர் சிரமப் பட்டனர்.

அதை அறிந்ததும், அரசுக் குடியிருப்புகளில் மிகக் குறைந்த வாடகையில் பத்திரிகையாளர்கள் குடியிருப்பதற்கு வீடுகளை ஒதுக்கித் தர கலைஞர் உத்தரவிட்டார். இது நடந்தது, 1989-இல்!

### ‘அரசை எங்களோடு நடத்துங்கள்’

1989-ஆம் ஆண்டு, மூன்றாவது முறையாக கலைஞர் தலைமையில், அரசு அமைந்தது. அதையொட்டி, சென்னை நிருபர்கள் சங்கம், அவருக்கு 1989-ஆம் ஆண்டு பிப்ரவரி 5 அன்று வரவேற்பு அளித்தது. அந்தக் கூட்டத்தில் அவர் பேசியதாவது:

“நான் கடந்த 76 -ஆம் ஆண்டு வரையிலேகூட காலையில் வெளிவரும் அன்றைய எதிர்க்கட்சிகளின் ஏடுகள் எதுவாயினும், அவற்றைப் புரட்டிப் பார்த்து, அவற்றிலே அரசுக்கு விரோதமான செய்திகள் என்னென்ன வெளிவந்திருக்கின்றன அல்லது நாட்டில் நடைபெறுகின்ற செய்திகளை அரசுக்கு எதிராக எப்படி வெளியிட்டிருக்கிறார்கள் என்பதையும் கவனிப்பேன்.

உண்மையிலேயே அந்தச் செய்தி, நடைபெற்றிருக்குமேயானால், அதற்கு யார் பொறுப்பு, என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பன போன்றவைகளையெல்லாம் அந்தப் பத்திரிகைகளைத் துணையாகக் கொண்டு, நான் உடனடியாக அவற்றை நிவர்த்தி செய்யவும், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவும் அந்தக் காலத்திலேயே, அந்தப் பயிற்சியை நான் பெற்றிருக்கிறேன்.

எனவே, இப்பொழுதும் நீங்கள் பத்திரிகை மூலமாகவும் சொல்லலாம்; என்னைச் சந்திக்கும்பொழுதும் சொல்லலாம். இன்னும் சொல்லப் போனால், ஒரு தொலைபேசி மூலம்கூட, நீங்கள் அறிகின்ற தகவல்களைப் பற்றித் தெரிவிக்க வேண்டுமேயானால் என்னோடு சுலபமாக எப்போதும் தொடர்பு கொள்ளலாம். முன்பெல்லாம் நீங்கள் தொலைபேசியில் தொடர்பு கொள்ள விரும்பினால், நான்கு பேரைத் தாண்டி ஐந்தாவதாக நான் பேசுவதாக இருக்கும். இப்போது அந்தக் கவலையே உங்களுக்குத் தேவை இல்லை. மணி அடித்ததும் எடுத்து ‘கருணாநிதி பேசுகிறேன்’ என்று சொல்லுகிறவன்தான் உங்களுக்குக் கிடைத்திருக்கின்ற முதலமைச்சர் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

எனவே, நீங்கள் இந்த அரசை எங்களோடு சேர்ந்து நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி நடத்தினால்தான் நாட்டிற்கு லாபம், மக்களுக்கும் நன்மை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.”

### வீட்டு மனைகளுக்கு மானியம்

அந்தக் கூட்டத்தில்தான் பத்திரிகையாளர்கள் பலர் வீடுகளின்றி துன்பப்படுகிறார்கள் என்று தெரிந்துகொண்ட கலைஞர் அவர்கள், சென்னை திருவான்மியூருக்கு அருகில் கொட்டிவாக்கத்தில் 5.5 ஏக்கர் நிலத்தை 136 பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கினார். அங்கு அன்று, ஒவ்வொரு மனையின் விலை ரூ.1.50 இலட்சம். அதனை ரூ.1.20 இலட்சத்துக்கு வழங்கி, எஞ்சிய 30 ஆயிரம் ரூபாயை, ஒவ்வொரு பத்திரிகையாளருக்கும் அரசு மானியமாக அளித்து, என 20 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கி ஆணையிட்டது கலைஞர் அரசு.

அதன் பிறகு, 1997-இல் மதுரை தல்லாகுளத்தில் 61 பத்திரிகையாளர்கள் குடியிருப்புக்காக 3.7 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. போலவே திருச்சியில் 52 பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனை வழங்கப்பட்டது.

### வாடகைக் குடியிருப்பு வசதி

அதனைத் தொடர்ந்து, 2006-2011 காலகட்டத்தில், 22 மாவட்டங்களில் உள்ள 115 பத்திரிகையாளர்களுக்கு அரசு வாடகைக் குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டன. 17 பத்திரிகையாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வீடுகள் விற்பனை செய்யப்பட்டன.

மேலும், பத்திரிகையாளர்களுக்கு வீட்டு வசதி வாரியம் மூலம் சிறப்பு ஒதுக்கீடு அடிப்படையில் வாடகை வீடு ஒதுக்கவும், கலைஞர் நடவடிக்கை எடுத்தார். அதன்படி, 2011 ஜனவரி வரை தமிழ்நாடு முழுவதும் 315 பத்திரிகையாளர்களுக்கு வாடகைக் குடியிருப்பு ஒதுக்கப்பட்டது. சென்னையில் மட்டும் 115 பத்திரிகையாளர்களுக்கு வாடகைக் குடியிருப்புகள் வழங்கப்பட்டன.

**மணி அடித்ததும் எடுத்து ‘கருணாநிதி பேசுகிறேன்’ என்று சொல்லுகிறவன்தான் உங்களுக்குக் கிடைத்திருக்கின்ற முதலமைச்சர் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.**

இதே காலகட்டத்தில் திருச்சி, வேலூர், திண்டுக்கல், சேலம், தஞ்சை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இருந்த மொத்தம் 658 பத்திரிகையாளர்களுக்கு, சலுகை விலையில் வீட்டுமனைகள் வழங்கப்பட்டன. இந்த முறை, நிருபர்களுக்கு மட்டுமல்லாமல், சென்னை, வேலூர், சேலம், திண்டுக்கல், திருச்சி, நெல்லை, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் இருந்த 603 புகைப்படக்காரர்களுக்கும் சலுகை விலையில் வீட்டு மனைகள் வழங்கப்பட்டன.

அந்த வீடுகளில் இருந்துகொண்டுதான் இன்றும் பல பத்திரிகையாளர்கள் கலைஞரைப் போற்றியும் தூற்றியும் வருகிறார்கள். என்ன... தூற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்பதுதான் வேதனை..!

**...வலம் வருவோம்**



### ‘சின்ன வீடு வேண்டுமா?’

கலைஞர் கொண்டு வந்த இந்தத் திட்டத்தில் பயனடைந்தவர்களில் ஒருவர், பிரபல பத்திரிகையாளர் சாவி. வீடு ஒதுக்கீடு தொடர்பாக கலைஞருக்கும் சாவிக்கும் இடையே நடைபெற்ற சந்திப்புகள் குறித்து, ‘சாவி-85’ புத்தகத்தில் ராணிமைந்தன் எழுதியுள்ளார்.

பெருந்தலைவர் காமராசர் முதலமைச்சராக இருந்தபோது, சாவிக்கு சொந்தமாக வீடு இல்லை என்பதை அறிந்துகொண்டு, அவருக்கு ‘சிட்டி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்ட்’ (சி.ஐ.டி) மூலம் வீட்டு மனை ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், அதற்கு முதல் தவணையாகக் கட்டவேண்டிய பணம் சாவியிடம் இல்லை. அதன் பிறகு, நிலம் அவருக்குச் சொந்தமானாலும், வீடு கட்டிக் கொள்ள பண வசதி இல்லை. ஆட்சி மாறியது. பேரறிஞர் அண்ணாவுக்குப் பிறகு கலைஞர் முதல்வராகப் பொறுப்பேற்றார். அவரது அமைச்சரவையில் வீட்டு வசதி அமைச்சராக இருந்த ராசாராம், பத்திரிகை ஆசிரியர் சாவி வீடு கட்ட உதவினார்.

இதை மனதில் கொண்டு, ‘காமராஜ் அவர்களின் தயவால் மனை கிடைத்தது. கலைஞர் ஆட்சியில் வீடு கட்ட முடிந்தது’ என்று இறுதி வரையில் நினைவுகூர்ந்தார் சாவி.

அதன் பிறகு, 2000-இல், கலைஞர் தலைமையிலான அரசில், சாவிக்கு பெசன்ட் நகரில் ஒரு வீட்டுமனை ஒதுக்கப்பட்டது. ஆனால், அதில் சில சட்டச் சிக்கல்கள் இருந்ததால், கலைஞரிடம் சென்று, ‘இந்தச் சிக்கல்களை விரைவாக விலக்கிக் கொடுத்தால், இந்த வயதான காலத்தில் சின்னதாய் ஒரு வீடு கட்டிக் கொண்டு அமைதியாக ஓய்வெடுப்பேன்’ என்றார். அப்போது அவருக்கு வயது 85.

அதற்கு கலைஞர், ‘இந்த வயதில் உங்களுக்கு, சின்ன வீடு கேட்கிறதா?’ என்று கேட்டதும், சாவி குபீரென்று சிரித்துவிட்டார். தொடர்ந்து, வீடு தொடர்பான சிக்கல்களும் சரிசெய்யப்பட்டன.

### ரயில் விபத்தும் மக்களின் அச்சமும்...



இந்தியாவில் ரயில் விபத்துகள் என்பவை தொடர்கதையாகி வருகின்றன. கடந்த 20 நாட்களில் ஏழாவது முறையாக ரயில் விபத்து ஏற்பட்டுள்ளது. இதனால், பயணிகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

கடந்த 15 நாட்களில்,

ஜூலை 18: உ.பி., கோண்டாவில்,

ஜூலை 19: குஜராத்தின் வல்சாத் என்ற இடத்தில்,

ஜூலை 20: உ.பி., அம்ரோஹாவில்,

ஜூலை 21: ராஜஸ்தானின் அல்வாரில்,

ஜூலை 21: வங்காளத்தில்,

ஜூலை 29: பீகாரில்,

ஜூலை 30: ஜார்கண்டில் என 7 விபத்துகள் நிகழ்ந்துள்ளன. உயிர் இழப்பும் சேதங்களும் ரயில் பயணத்தின் மீது அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

விபத்துகளைத் தடுப்பதற்காக ஒன்றிய அரசு சொல்லும் ‘கவாச்’ (KAVACH) தொழில்நுட்பத்திற்கு இதுவரை ஆயிரத்து 113 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது. ஆனால், இது முழுமையாக நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட வில்லை என்றும் விமர்சனம் எழுந்துள்ளது.

இந்த ஆண்டு பட்ஜெட்டில் ரயில்வேக்கு ஒதுக்கப்பட்ட நிதியில், ‘கவாச்’ தொழில்நுட்பத்திற்கு 2 சதவிகிதம் மட்டுமே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. புல்லட் ரயில் விடப்படும் என கவர்ச்சித் திட்டங்களை அறிவிக்கும் ஒன்றிய அரசு, மக்களின் பாதுகாப்புக்கு உரிய தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். எதிர்க்கட்சிகளின் குரல்கள் மக்களின் அச்சத்தையும் உரத்துப் பேசுகின்றன, என்பதை ஒன்றியஅரசு உணர வேண்டும்.

### :.ப்ளாஷ்பேக்



### தலைவரிடம் பெற்ற வாழ்த்து!



ஈ.தங்கராஜ்

2002-ஆம் ஆண்டு 12-வது கழக அமைப்புத் தேர்தலில் கழக நிர்வாகிகளால் 358 வாக்குகள் பெற்று, திருப்பூர் ஒன்றியப் பிரதிநிதியாகத் தேர்வு செய்யப்பட்டேன். பின், கழக நிர்வாகிகளுடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றேன். கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர், பொருளாளர் ஆற்காடு வீராசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

**– ஈ.தங்கராஜ்,**
**இளைஞர் அணி அமைப்பாளர்,**
**திருப்பூர் வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்

**முத்தமிழறிஞர் பட்டம்!**

1990-ஆம் ஆண்டு, மே மாதம் 25-ஆம் தேதி, **‘தென்பாண்டிச் சிங்கம்’** நூலுக்காக தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் **‘மாமன்னன் இராஜராஜன் விருது’** குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா அவர்களால் வழங்கப்பட்டது. மேலும், அவர் **‘தங்கப் பேனா’** ஒன்றைப் பரிசாக அளித்து, **‘முத்தமிழறிஞர்’** எனப் பட்டம் வழங்கினார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம் 556

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131